## ஜூலை



# 7. தேர்ந்துகொள்ளும் பாதை

## முன்னுரை

ஜூலை மாதத்தில் அடியெடுத்து வைத்திருக்கும் நாம் ஒரு வழியாய் நிம்மதிப் பெருமூச்சு விடுவோம். பிள்ளைகளை நல்ல பள்ளிகளிலோ, நல்ல கல்லூரிகளிலோ சேர்த்துவிட்டோம், அவர்களுக்கான சிறந்த படிப்பைத் தேர்வு செய்து விட்டோம் என்றெல்லாம் மனதுக்குள் மகிழ்ந்திருப்போம். நல்ல விஷயம்தான்! ஆனால் அதைவிட முக்கியமான ஒன்றை நாம் சரியாக தேர்ந்து கொண்டோமா? என்பதைப் பற்றி பல நேரங்களில் நாம் சிந்திக்கத் தவறிவிடுகிறோம். இணைச்சட்ட நூலின் ஒரு பகுதி இப்படிச் சொல்கிறது: ‘‘இதோ பார், வாழ்வையும் நன்மையையும், சாவையும் தீமையையும் இன்று நான் உனக்கு முன்பாக வைத்துள்ளேன்... வாழ்வையும் சாவையும், ஆசியையும் சாபத்தையும் உனக்கு முன் வைக்கிறேன். நீயும் உன் வழித்தோன்றல்களும் வாழும் பொருட்டு வாழ்வைத் தேர்ந்து கொள். உன் கடவுளாகிய ஆண்டவர் மீது அன்பு பாராட்டு; அவரது குரலுக்குச் செவி கொடு; அவரையே பற்றிக்கொள். ஏனெனில் அவரே உனது வாழ்வு, அவரே உன் நீடிய வாழ்வு.’’ (இ.ச.30: 15,19,20) நமது வாழ்வு ஆசிகள் நிறைந்ததாக உள்ளதா? சாபங்கள் நிறைந்ததாக உள்ளதா? என்பது நாம் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு நொடியும் எடுக்கிற முடிவுகளைப் பொறுத்தது; நாம் செய்கின்ற தேர்வுகளைப் பொறுத்தது. இந்தச் சிலுவைப் பாதையில் நமது தேர்வுகள் எத்தகையவை எனச் சற்று ஆராய்வோம்.

◆

### ✦ முதல் நிலை

## கூட்டத்தில் ஒருவனா? தனியொருவனா?

இயேசுவை அநியாயமாகத் தீர்ப்பிட்டபோது, நிச்சயமாக சிலர் அவருக்காகக் குரல் கொடுக்கத்தான் செய்திருப்பார்கள்.

ஆனால் அவர்கள் குரல் எடுபடவில்லை. இன்னும் பலர் தங்கள் குரல் எடுபடாது என்கிற நினைப்பிலேயே, குரல் கொடுக்காமல் பதுங்கியிருப்பர். தனியொருவனாய் நியாயத்தின் பக்கம் நிற்பதைவிட, கூட்டத்தில் ஒருவனாய் அநியாயத்தைக் கண்டு கொள்ளாமல் போவது தங்களுக்கு பாதுகாப்பானது எனப் பலர் நினைத்திருக்கக்கூடும். ஏன், ஆட்சி அதிகாரத்தைக் கையில் வைத்திருந்த பிலாத்துவே கூட கூட்டத்துக்குத்தான் அஞ்சினான். எங்கே தன்னை சீசருக்கு எதிரானவன் என சித்தரித்து விடுவார்களோ என்கிற பயம் தானே அவனைக் கை கழுவ வைத்தது.

நீதியின் பக்கமா? அநீதியின் பக்கமா? பொய்மை பகரும் பெரும்பான்மையின் பக்கமா, உண்மையை உரைக்கும் சிறுபான்மையின் பக்கமா? கூட்டத்தில் ஒருவராய் இருந்து தப்பித்துக் கொள்ள நினைக்கும் சுயநலமா, தனித்து விடப்பட்டாலும் எதையும் சந்திக்கத் துணியும் மன உறுதியா? இந்தத் தேர்வினை செய்ய அன்றும் சரி, இன்றும் சரி, மனித குலம் சிரமப்பட்டுக் கொண்டேதான் இருக்கிறது.

எத்தனை முறை லஞ்சம் கொடுக்கக்கூடாது என்று நினைத்த நாம், கடைசியில் நிர்ப்பந்தத்திற்குப் பணிந்து லஞ்சம் கொடுத்திருக்கிறோம்? எத்தனை முறை கண்ணெதிரே நடந்த கொடுமைக்கு சாட்சி பகர நினைத்து, பின்னர் ‘நமக்கேன் வம்பு?’ என ஒதுங்கியிருக்கிறோம்? எத்தனை முறை பொதுத் தேர்தலிலும்கூட, வாக்களிக்கவே கூடாது என்று நினைத்த கட்சிக்கு, ஜெயிக்கப் போகிற கட்சி அதுதான் எனக் காசு வாங்கிக்கொண்டு வாக்களித்திருக்கிறோம். இப்படி தயக்கத்தோடும், துணிவின்றியும் நாம் செய்யும் தேர்வுகள் தாம் நம் எதிர்காலத்தையும், சமூகத்தின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கின்றன. இயேசுவின் வார்த்தைகளை நினைவில் கொள்வோம். “என்னோடு இராதவர். எனக்கு எதிராக இருக்கிறார். என்னோடு இணைந்து மக்களைக் கூட்டிச் சேர்க்காதவர் அவர்களைச் சிதறச் செய்கிறார்.” (மத். 12:30)

## செபம்

உலகமே எதிர்த்து நின்றாலும், உம் பக்கமும் உண்மையின் பக்கமும் நிற்கக்கூடிய துணிச்சலைத் தாரும் இயேசுவே.

◆

✦ இரண்டாம் நிலை

# இடுக்கமான பாதையா? இலகுவான பாதையா?

"தந்தையே! நீர் எப்போதும் என் வேண்டுதலுக்குச் செவி சாய்க்கிறீர் என்பது எனக்குத் தெரியும்" (யோ. 11:42) என்று பகர்ந்த இயேசுவுக்கு "தந்தையே! இந்தச் சிலுவை வேண்டாம்; வேறு வழி ஏதாவது இருந்தால் தந்தருளும்" என வற்புறுத்தியிருக்க முடியாதா? நிச்சயம் முடிந்திருக்கும். ஆனால் இயேசு என்றைக்குமே குறுக்குவழிகளை நம்பியவரல்ல. அப்படி அவர் எளிதான வழிகளையும், சிரமமில்லா பாதைகளையும் விரும்பியிருந்தால், தமது பணி வாழ்வின் தொடக்கத்திலேயே அலகையின் மூன்று சோதனைகளுக்கும் அடிபணிந்து உடல் பசியை, புகழின் போதையை, அதிகாரப் பசியைப் போக்கியிருக்க முடியும். ஆனால், அவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு சிலுவையை அரவணைக்கத் துணிந்த இயேசு எப்போதுமே கடினமானதானாலும் நேரிய வழியையே தேர்வு செய்தார்.

நேரிய பாதையில், கடினமாக உழைத்து, சுய முயற்சியால் பல சாதனைகளை நிகழ்த்த வேண்டும் என்றுதானே நாம் எல்லோரும் ஆசைப்படுகிறோம். ஆனால் நடப்பது என்ன? குறுக்கு வழியில் செல்கிறவர்கள் எல்லாம் குறுகிய காலத்திலேயே உச்சத்தை எட்டிவிடுகிறார்கள். நேர்மையாக வாழ முயற்சிக்கிறவர்கள் எல்லோரும் தினம் தினம் திண்டாட வேண்டியுள்ளது என்பதுதானே நிதர்சனமான உண்மை. இதில், நாம் மட்டும் ஏன் உண்மை, நேர்மை, நியாயம் என்று உடும்புப் பிடியாய் இருக்க வேண்டும்? சிபாரிசு, லஞ்சம்,

சிறிய முறைகேடு போன்ற குறுக்கு வழிகளைப் பயன்படுத்தி, அடைய வேண்டிய இலக்கை அடைந்தபின் நேர்மையாக இருக்க முயற்சிப்போம். அதுவரை சற்று நீக்குப் போக்காக இருப்பதுதான் பிழைப்பதற்கான ஒரே வழி என நம்மில் பலர் நினைப்பது இல்லையா? எந்தச் சூழ்நிலையிலும், எந்த விளைவுகள் வந்தாலும், நான் நேரிய வழியையும், கடினமான பாதையையும் கைவிட மாட்டேன் என்று சொல்லக்கூடிய நெஞ்சுரம் நம்மில் வெகு சிலருக்கே அமைந்துள்ளது. நம்முடைய தேர்வு என்ன? கடினமான இடுக்கமான பாதையா? எளிமையான அகன்ற பாதையா? பாரச் சிலுவையை சுமந்து நமக்கு முன்மாதிரியாய்த் திகழும் இயேசு சொல்லுகிறார்: 'அழிவுக்குச் செல்லும் வாயில் அகன்றது; வழியும் விரிவானது; அதன் வழியே செல்வோரும் பலர். வாழ்வுக்குச் செல்லும் வாயில் மிகவும் இடுக்கமானது; வழியும் மிகக் குறுகலானது; இதைக் கண்டுபிடிப்போர் சிலரே." (மத். 7:13,14)

**செபம்**

குறுக்கு வழிகளால் கவரப்படாமல், கடினமான நேரிய பாதையில் பயணிக்கும் மனத்திடத்தைத் தந்தருளும் இயேசுவே!

◆

✦ **மூன்றாம் நிலை**

## எரிகிற விளக்கா? எரியா விளக்கா?

உடல் சோர்வுறும்போது மனமும் சோர்ந்து போவது இயல்பான ஒன்றுதான். எனவேதான், சிலுவைப் பாதையின்போது இயேசு தடுமாறுவதைக் காண்கின்றோம். மனித இயல்பை நன்றாகவே புரிந்து வைத்திருந்த இயேசு, தாம் பாடுபடுவதற்கு முந்தைய இரவில், தம் சீடர்களுக்கு தெளிவாகவே சொல்லியிருந்தார், "மனம் ஆர்வமுடையதுதான்; ஆனால் உடல் வலுவற்றது." (மத். 26:41) எத்துணை ஆர்வமாய் சிலுவையை இயேசு ஏற்றிருந்தாலும், உடல் அவருக்கு ஒத்துழைக்க மறுத்ததால் அவர் தடுமாறித் தரையில் விழுகிறார்.

நாமும்கூட, நம் வாழ்வில் இதனையே அனுபவிக்கிறோம். செய்யக்கூடாது என்று நினைப்பதை நாம், எத்தனை முறை செய்துவிட்டுத் தவிக்கிறோம்? செய்ய வேண்டும் என்று நினைப்பதை எப்படிச் செய்ய முடியாமல் திணறுகிறோம்? தூய பவுலடியார் அழகாகச் சொல்லுவார், “நான் செய்ய நினைக்கும் நன்மையை என்னால் செய்ய முடியவில்லை; செய்யத் தவிர்க்கும் தீமையை செய்து விடுகிறேன்” என்று. தவற்றில் விழுவது என்பது நம் எல்லோருக்கும் தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. பாவத்தில் விழுவது என்பது பழகிப்போன ஒன்றாகி விடடது. ஆனால், சோதனைகளை வெல்ல ஒரு அருமையான வழியை இயேசு காட்டியிருப்பதை நாம் மறந்து விடுகிறோம். தூக்கக் கலக்கத்தில், தம்மோடிருந்த சீடர்களைப் பார்த்து இயேசு சொன்ன வார்த்தைகள் இவை: “சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்” (மத். 26:41). “எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும்” (மத். 6:13) எனத் தினந்தோறும் செபிக்கும் நாம் எவ்வளவு விழிப்பாய் இருக்கிறோம் என்பது தான் கேள்வியே! நம் எல்லோருக்கும் நல்லவராய் இருக்க வேண்டும் என்கின்ற எண்ணம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அதற்கான முனைப்பும், முயற்சியும் இருக்கிறதா? நல்லெண்ணம் மட்டுமே போதுமானதல்ல; முயற்சியும், விழிப்புணர்வும் தேவை என்பதற்கு இயேசு கூறிய அழகான உவமைதான் பத்து கன்னியர் உவமை.

“ஆயத்தமாய் இருங்கள்; விழிப்பாயிருங்கள்” (மத். 25:1-13) என்கிற அறிவுறுத்தலோடு நிறைவு பெறும் இந்த உவமை நம் முன் வைக்கின்ற கேள்வி: “நீங்கள் வைத்திருக்கும் விளக்கு எரிகிற விளக்கா? எரியா விளக்கா? உங்களிடம் இருக்கும் நல்லெண்ணம் முயற்சியுடன் கூடியதா? அல்லது வெற்று ஆசையா?” விழுந்தாலும், முனைப்போடு எழுந்து நடந்த இயேசு நம்முன் வைக்கிற கேள்வியும் அதுதான்.

◆

## செபம்

முயற்சியில்லா நல்லெண்ணம் எண்ணெய் இல்லா விளக்கு என்பதை உணர்ந்து, முனைப்போடு கூடிய விழிப்புணர்வை எங்களுக்குத் தாரும் இயேசுவே!

✦ நான்காம் நிலை

# எதிர்கொள்ளும் துணிவா? ஒளிகின்ற பயமா?

குற்றமேதுமின்றிதான் தாம் துன்புறுத்தப்படுகிறோம் என்பதை இயேசு அறிந்திருந்தாலும், இதைக் காணுகிற சக்தியும், தாங்குகிற தெம்பும் தம் அன்னைக்கு இருக்குமா என இயேசு மிகவும் கலங்கிப் போயிருப்பார். அன்னை மரியாவும்கூட எந்த முகத்தோடு என் மகனை இந்தச் சூழலில் சந்திப்பேன் எனத் துடித்துத்தான் போயிருப்பார். ஆனால் இருவரும் சந்தித்துக் கொண்டனர். ஏற்க முடியாத அந்தச் சூழலை இருவரும் எதிர்கொண்டனர். அந்தச் சந்திப்பின்போது இதயத்தை வாள் ஊடுருவத்தான் செய்திருக்கும். ஆனால், அந்த வலியில் பிறந்த வலிமையோடு மரியாவால் இறுதிவரை இயேசுவோடு பயணிக்க முடிந்தது.

வாழ்வில் பல நேரங்களில் நாம் உண்மையை எதிர்கொள்ள அஞ்சுகிறோம். அது ஏற்படுத்தக்கூடிய தாக்கம், அதனால் ஏற்படக்கூடிய அவமானம் என ஏதேதோ காரணங்கள் சொல்லி உண்மையை எதிர்கொள்ளத் துணிவில்லாமல் ஒளிந்து கொள்கிறோம். இது ஒன்றும் மனித குலத்துக்குப் புதிதல்ல. நம் முதல் பெற்றோராகிய ஆதாமும் ஏவாளும், தாங்கள் பாவத்தில் விழுந்ததும், கடவுளை எதிர்கொள்ளத் துணிவில்லாமல் ஒளிந்து கொண்டனர். "நீ எங்கே இருக்கிறாய்?" (தொ.நூ. 3:9) என படைத்தவரையே தேட வைத்தனர் அவர்கள் இருவரும். ஒருவேளை, அன்றைக்கே அவர்கள் "கடவுளே! அறியாமல் செய்துவிட்டோம், மன்னித்தருளும்" என்று கதறியிருந்தால்

மானுடக் காவியமே வேறு விதமாய் அமைந்திருக்கக்கூட வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால், அந்தோ பரிதாபம். அன்று முதல் இன்றுவரை, மனித இனம் தன் சறுக்கலையோ, குற்றத்தையோ நேர்மையாய் ஒப்புக்கொண்டு, அதற்கான விளைவைத் துணிவாக எதிர்கொள்ள முயலுவதே இல்லை. “ஐ அம் சாரி; என்னை மன்னித்து விடுங்கள்” என உண்மையை ஏற்றுக்கொள்ளும் தருணம் சற்று கடினமாகத்தான் இருக்கும். அவமானமாகக்கூட இருக்கும். ஆனால், அத்தோடு விஷயம் முடிந்து விடும். ஆனால், உண்மையை ஒளித்து வைத்து போலியாக வாழ முற்படும்போது ‘எப்போது மாட்டிக் கொள்ளப் போகிறோமோ?’ என்கிற பயத்திலேயே தினம் தினம் செத்துப்போவோம். நாம் எதைத் தேர்வு செய்யப்போகிறோம். இயேசுவிடமும், மரியாவிடமும் இருந்த யதார்த்தத்தை எதிர்கொள்ளும் துணிவையா? அல்லது ஆதாம் ஏவாள் போல பயந்து ஒளியும் கோழைத்தனத்தையா?

**செபம்**

உண்மையை மறைத்து, செய்த குற்றத்தை ஒப்புக் கொள்ளாது, ஒளிந்து வாழும் கோழைத்தனத்தைத் தவிர்த்து, எதனையும் எதிர்கொள்ளும் துணிவினைத்தாரும் இயேசுவே!

◆

✦ **ஐந்தாம் நிலை**

## பரிவுள்ள கரமா? பாரா முகமா?

வரலாறு உள்ளவரை சிலுவைப் பாதையின்போது, சீரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் இயேசுவுக்கு உதவினார் என்பது நினைவு கூறப்படும். ஆனால், ஒருவேளை வற்புறுத்தப்படாமல் போயிருந்தால், வழிப்போக்கனாகிய அவனும் இயேசுவைக் கடந்து பாராமுகமாய்ப் போயிருப்பான். எது எப்படியோ, அவன் இயேசுவுக்கு உதவினான்; நாமும் அவனது உதவியை வருடம் தவறாமல் நினைவு கூர்ந்து கொண்டே இருக்கிறோம். அதுதான் பரிவுள்ள பிறரன்புச் செயலின் மகத்துவம்.

ஆனாலும் கூட, நம்மில் பலருக்கு ஓடிச்சென்று உதவும் மனம் வருவதில்லை. உதவக்கூடாது என்கிற கெட்ட குணமோ, வன்மமான புத்தியோ அதற்குக் காரணம் அல்ல. கண்டு கொள்ளாமை என்கிற கயமைக்கு நாம் அனைவரும் அடிமையாகி விட்டோம். “யாராவது பார்த்துக்கொள்ளட்டும்; நாம் நமது வேலையைக் கவனிப்போம்” என்று நகர்ந்து செல்லுதல் நம் எல்லோருக்கும் பழக்கமாகிவிட்டது. “நான் என்ன, என் சகோதரனுக்குக் காவலாளியா?” (தொ.நூ. 4:9) என்று காயின் வாய்விட்டுச் சொன்னதை நாம் வாழ்விலே கைக்கொண்டு வருகிறோம்.

இப்படிப்பட்ட நமக்கு இயேசுவின் இரண்டு உவமைகள் வினாத் தொடுக்கின்றன. “யார் எனக்கு அடுத்திருப்பவன்?” என்று கேட்டவனுக்கு இயேசு சொன்ன உவமையில் வரும் குருவும், லேவியரும் இன்றைக்கும் நமக்குள் கூடாரம் போட்டு குடிகொள்கிறார்கள். கண்டு, மனமிரங்கி உதவக்கூடிய நல்ல சமாரியனைத்தான் காணவே முடிவதில்லை. உதவுவதற்கு வாய்ப்பிருந்தும் உதவாமல் இருப்பது ஒன்றும் பெரிய குற்றமில்லை என்று நினைக்கிற நம்மில் பலருக்கு இயேசுவின் இன்னொரு உவமை கண்டனமாய் அமைந்துள்ளது. மெல்லிய உடையணிந்து, மகிழ்ச்சியாய் விருந்துண்ட செல்வந்தன் தவறேதும் செய்ததாக, விவிலியத்தில் பதிவேதும் இல்லை. ஆனால், அவன் எரிநரகத்தில் துன்புறுவதாக இயேசு வருணிக்கிறார். அதற்கு ஒரே காரணம். அவன் வீட்டு வாயிலில் ஒட்டிய வயிறோடு பட்டினி கிடந்த இலாசரைக் கண்டு கொள்ளாததுதான். யாராக இருக்கப் போகிறோம்? கண்டு கொள்ளாத குருவைப் போலவா, லேவியரைப் போலவா அல்லது அந்த பணக்காரனைப்போலவா? பரிவுள்ள கரமா? பாரா முகமா? தேர்வு செய்ய வேண்டியது நாம் தான். குறைந்த பட்சம் சீமோனைப் போல கட்டாயத்தின் பேரிலாவது உதவ முன்வருவோம்.

**செபம்**

உதவிட வாய்ப்பிருந்தும், கண்டுகொள்ளாமல் நகர்கின்ற கல்மனம் போக்கி, கரிசனையோடு உதவுகிற நல்மனம் தாரும் இயேசுவே!

◆

## ✦ ஆறாம் நிலை

# அன்பின் பெருக்கா? ஆதாயக் கணக்கா?

நம்மில் பலருக்கு உதவிட மனம் இருக்கிறதோ இல்லையோ? விமர்சிக்க உதடுகள் மட்டும் விரிந்தே இருக்கின்றன. ஆனால், வெரோனிக்கா வித்தியாசமானவள். விமர்சனம் செய்வதில் அவளுக்கு நம்பிக்கையில்லை. விமர்சனம் செய்பவர்கள் குறித்தோ, ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்தோ, அவளுக்கு அக்கறையும் இல்லை. சின்னாபின்னமான ஒரு முகத்தைப் பார்த்தாள். தன்னால் முடிந்த ஒருச்சின்ன உதவியைச் செய்யத் துணிந்தாள். அன்பின் பெருக்கால் விரைந்தோடிச் சென்றாள்; இயேசுவின் திருமுகம் துடைத்தாள்.

எத்தனை முறை, நமக்கும்கூட இரக்கக்குணம் இயற்கையாய் துளிர்த்திருக்கிறது. ஆனால், அதனை வளரவிடாமல் தடுத்தது நாம் போட்ட லாப நட்டக் கணக்கு. இதனைச் செய்தால் நமக்கு ஏற்படக்கூடிய நன்மை என்ன? தீமை என்ன? இதனைச் செய்தால், பாராட்டுகள் அதிகம் வருமா? பழிச் சொற்கள் அதிகம் வருமா? பெருமை கிட்டுமா? பொல்லாப்பு மிஞ்சுமா? எந்த ஆதாயமும் இல்லாமல் ஒரு இரக்கச் செயலை நாம் ஏன் மெனக்கெட்டுச் செய்யவேண்டும் என்கிற சுயநலக் கேள்விகள் மேலெழும்போது இரக்கக்குணம் முளையிலேயே கிள்ளியெறியப்பட்டு விடுகிறது.

இயல்பான இரக்கக்குணமும், கலப்படமில்லா கருணையும் உண்மையான அன்பும் எப்போதும் கணக்குப் பார்ப்பதில்லை என்பதற்கு இயேசுவின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்வே சான்று.

“கலப்பற்ற விலையுயர்ந்த நறுமணத் தைலம் ஏறக்குறைய முந்நூற்று இருபது கிராம் கொண்டு வந்து இயேசுவின் காலடிகளில் பூசி அதனைத் தம் கூந்தலால் துடைத்த (யோவா. 12:3) ஒரு பெண்ணின் செயலைக் காட்டிக் கொடுக்கக் காத்துக்கொண்டிருந்த யூதாசு இஸ்காரியோத்து இப்படித்தான் விமர்சித்தான்: “இந்தத் தைலத்தை முந்நூறு தெனாரியத்திற்கு விற்று அப்பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கக் கூடாதா?” (யோவா. 12:5) அவன் திருடனாய் இருந்ததால் இப்படிக் கேட்டான் என்பதையும் திருவிவிலியம் கோடிட்டுக் காட்டுகிறது. கடவுளின் கண்களில் அன்பின் பெருக்கால் செய்யப்படும் கனிவான செயல்களின் மதிப்பே தனி. எனவேதான், விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல், தம் முகத்தைத் துடைத்த வெரோனிக்காவின் அன்புப்பெருக்கிற்குப் பரிசாக இயேசு தம் திருமுகத்தையே அவரது துகிலில் பதிக்கிறார். நாம் தெரிந்து கொள்ளப்போவது எதனை? - அன்பின் பெருக்கையா? ஆதாயக் கணக்கையா?

**செபம்**

ஆதாயம் தேடாமல், அன்பின் பெருக்கால், அறச் செயல்கள் புரியும் அருளினைத் தாரும் இயேசுவே!

◆

✦ **ஏழாம் நிலை**

## அடக்கத்தில் உயர்வா? அகந்தையில் வீழ்ச்சியா?

இரண்டாம் முறை கீழே விழுந்த இயேசுவைப் பரிகசித்த பரிசேயரும், துன்புறுத்திய வீரர்களும் நமக்குக் கொடியவர்கள் போலத் தோன்றலாம். ஆனால் அந்தக் கொடியவர்கள் நமக்குள்ளும் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் நிஜம். தோற்றுப் போகிறவர்களையோ, பின்தங்கிப் போனவர்களையோ, நம்மைவிட வசதி வாய்ப்புக்

குன்றியவர்களையோ பார்த்தவுடன் நமக்கு ஏற்படுகிற உடனடி உணர்வு என்ன? "நல்லவேளை, நமக்கு இப்படி ஒருநிலை ஏற்படவில்லை" என்கிற ஒரு நிம்மதி. இன்னும் சிலருக்கு அதைவிட மட்டமான எண்ணம்கூடத் தோன்றலாம்." "என்ன பாவம் செய்தார்களோ? இந்தப் பாடு படுகிறார்கள்?" என்று பரிகசிக்கும் பரிசேய குணம் நம்மில் சிலருக்கு இருக்கலாம்.

ஆனால் வரலாறு ஒரு பாடத்தை நமக்குப் புரிய வைக்கிறது. அன்றைக்கு விழுந்த இயேசு இன்றைக்கும் வீழ்ச்சியுறா மன்னராக வழிபடப்படுகிறார். அன்றைக்குப் பரிகசித்தப் பரிசேயர்கள் இன்றைக்கும் பாதகர்களாய் நினைவு கூறப்படுகின்றனர். இந்த உலகில் சிலருக்கு சில விஷயங்கள் வாய்ப்பதில்லை. நமக்கு அவை வாய்த்திருக்கிறதென்றால் அது கடவுளின் கொடை. அதனால் நாம் எந்தவிதத்திலும் மேலானவர்களும் அல்ல; அவர்கள் எந்த விதத்திலும் கீழானவர்களும் அல்ல. ஒருவேளை நாம் அப்படி நினைத்தோம் என்றால் நாம் அறிவிலிகள், இறைவனுக்கு ஏற்புடையவர்கள் அல்ல என்பதைப் புரிய வைக்க இயேசுவே உவமை ஒன்றைச் சொல்லிச் சென்றிருக்கிறார். வாரத்தில் இருமுறை நோன்பிருந்து, வருவாயில் பத்திலொரு பங்கினை கடவுளுக்குக் கொடுத்து வந்த பரிசேயர் ஒருவரையும், ஓரமாய் நின்று செபித்த வரிதண்டுபவரையும் நம் கண்களுக்கு முன்நிறுத்தும் இயேசு "பரிசேயரல்ல, வரிதண்டுபவரே கடவுளுக்கு ஏற்புடையவராகி வீடு திரும்பினார் (லூக். 18:14) எனத் தான் கூறிய உவமையை நிறைவு செய்கிறார் இயேசு. அதற்குக் காரணம் அந்தப் பரிசேயனின் அகந்தையான சொற்கள்தான். "கடவுளே! நான் கொள்ளையர், நேர்மையற்றோர், விபச்சாரர்... போலவோ, இந்த வரிதண்டுபவர் போலவோ இல்லாதது பற்றி உமக்கு நன்றி செலுத்துகிறேன்." (லூக். 18:11) அகந்தையால் பரிசேயன் இறைவனின் நன்மதிப்பை இழந்தான். தாழ்ச்சியால் அந்த வரிதண்டுபவன் இறைவனுக்கு ஏற்புடையவன் ஆனான். வழியில் விழுந்து வரலாற்றில் வீழாது நிற்கும் இயேசுவைப் போல் நாம் உயர வேண்டுமென்றால் தாழ்ச்சி என்கின்ற

குணம் மிகவே அவசியம். நாம் எதனைத் தெரிந்து கொள்ளப் போகிறோம் - அடக்கத்தில் உயர்வையா? அகந்தையில் வீழ்ச்சியையா?

**செபம்**

அகந்தையைத் துறந்து, மற்றவர்களை என்னைவிட, உயர்ந்தவர்களாய்க் கருதுகிற தாழ்ச்சியினைத் தந்தருளும் இயேசுவே!

◆

## ✦ எட்டாம் நிலை

## பலன் தரும் பயிரா? பயனில்லா பதரா?

தன்னைக் குறித்து கவலைப்பட்டு, தனக்காகக் கண்ணீர்விட்ட எருசலேம் மகளிருக்கு ஆசி வழங்குவதற்குப் பதிலாக, இயேசு அறிவுரை வழங்குவது சற்று விந்தையாகத்தான் உள்ளது. ஆனால் அது ஒன்றும் அவ்வளவு வினோதமான ஒன்று அல்ல. எத்தனைமுறை தந்தையரும் தாய்மார்களும் தங்கள் பிள்ளைகளைப் பார்த்து "இப்போ அழுது என்ன பிரயோஜனம்? கஷ்டப்பட்டிருக்க வேண்டிய நேரத்தில் கஷ்டப்பட்டு ஒழச்சிருக்கணும்" என்று சொல்லியிருக்கிறோம். மனிதர்களாகிய நமக்கே உண்டான பலவீனம் இது. வியர்வை சிந்த வேண்டிய நேரங்களில் அயர்ந்து விட்டு, உயர்ந்து நிற்க வேண்டிய நேரத்தில் கண்ணீர் விடுகிறோம்.

எருசலேம் மகளிரது கண்ணீர் இயேசுவுக்குள் ஒரு ஆதங்கத்தை ஏற்படுத்தியது. இப்படிப்பட்ட ஒரு ஆதங்கத்தைத்தான் அவர் இரண்டுமுறை அழுதபோதும் காண முடிந்தது. எருசலேமுக்கு நிகழவிருக்கும் அழிவைக் குறித்து அவர் கண்ணீர் வடித்ததாகவும் (லூக். 19:41) இலாசரின் மரணத்தின்போதும் அவர் கண்ணீர் விட்டு அழுததாகவும் (யோவா. 11:35) திருவிவிலியம் கூறுகிறது. தனிமனித அழிவையும் மனிதகுல அழிவையும் இறைமகனாம்

இயேசு விரும்புவதேயில்லை. மாறாக வருத்தமுறுகிறார்; கண்ணீர் விட்டு அழுகிற அளவுக்கு வருத்தமுறுகிறார். எனவேதான் விண்ணரசைக் குறித்த ஒரு உவமையில் கூட, கோதுமையோடு வளர்ந்த களைகளைப் பறித்து விடலாமா? எனக்கேட்ட பணியாளர்களிடம் ‘‘அறுவடைவரை இரண்டையும் வளர விடுங்கள்’’ (மத். 13:30) என உரிமையாளர் கூறுவதாக இயேசு சொல்கிறார். ஆனால், தந்தையாம் கடவுள் எவ்வளவுதான் கனிவுள்ளவராகவும், பொறுமையுள்ளவராகவும் இருந்தாலும் கடைசி நாள் என்று ஒன்று வந்துதானே தீரும். அப்போது கண்ணீர் வடிப்பதைவிட, இப்போதே கண்ணியமாய் நடந்து, கனி தரும் வாழ்வினை நாம் வாழ்ந்திட வேண்டும் என்பதுதான் இயேசுவின் ஆசை. அதனையே ஓர் எச்சரிக்கையாய் எருசலேம் மகளிருக்குக் கூறுகிறார். ‘‘பச்சை மரத்திற்கே இவ்வாறு செய்கிறார்கள் என்றால், பட்ட மரத்துக்கு என்னதான் செய்ய மாட்டார்கள்? (லூக். 23:31) என்று. மனிதர்கள் மட்டுமல்ல, கடவுளுமே கூட கனிதரா கொடிகளைக் கூட்டிச் சேர்த்து எரித்துவிடுவார் (யோவா. 15:6) என்பதுதான் சத்தியம். தேர்வு செய்ய வேண்டியது நாம்தான். நாம் எப்படி வாழப் போகிறோம்: பலன் தரும் பயிராகவா? பலனில்லா பதராகவா?

### செபம்

கண்ணீர் சிந்துவதைவிட வியர்வை சிந்துவதே மேல் என்பதை உணர்ந்து, கனிதரும் வாழ்வினை மேற்கொள்ளும் அருள்தாரும் இயேசுவே.

◆

## ✦ ஒன்பதாம் நிலை

# ஏற்கும் மனமா? எதிர்க்கும் குணமா?

எப்படித் தொடங்குகிறோம் என்பது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் எப்படித் தொடர்கிறோம் என்பதும்,

எப்படி முடிக்கிறோம் என்பதும். தமது கல்வாரிப் பயணத்தைத் துணிவோடு தொடங்கிய இயேசு தடுமாறினார் என்பது யதார்த்தம். ஆனால், அவர் துவண்டு போகவில்லை என்பதுதான் சரித்திரம். மூன்று முறைக்கு மேல் கூட இயேசு விழுந்திருக்கலாம். ஆனால், இயேசு மீண்டு எழுந்து தமது தியாகப் பயணத்தை முடித்தார் என்பதில் தான் அவரது மாண்பு துவங்குகிறது.

"வேகமாகச் செல்ல வேண்டுமென்றால் தனியாகச் செல்; தொலைதூரம் செல்ல வேண்டுமென்றால் துணையோடு செல்" என்கிறது ஒரு பழமொழி. நம்மில் பலர் வாழ்க்கையில் வேகமாகச் செல்வதில் கவனமாய் இருக்கிறோம். அந்த வேகத்தில், பல உறவுகளை இழக்கிறோம், சில பகைகளை வளர்க்கிறோம். கடைசியில் தனித்துவிடப்பட்டதாய் உணர்ந்து தவிக்கிறோம். காணாமல் போன மகன் உவமையில் மனந்திருந்தி வந்த இளைய மகனை தந்தை ஏற்றுக் கொண்டார். ஆனால் மூத்த மகனோ ஏற்றுக் கொள்ளவில்லை. கடைசியில் இழப்பு யாருக்கு? உவமையின் முடிவில் இளைய மகனை நாம் பார்ப்பது வீட்டிற்குள் விருந்து கொண்டாடுபவனாய். மூத்தமகனை நாம் பார்ப்பது வீட்டிற்கு வெளியே, வெறுப்புடனும் விரக்தியுடனும். மூத்த மகன் நன்றாகத் தான் தன் வாழ்க்கையைத் தொடங்கினான். "மகனே, நீ எப்போதும் என்னுடன் இருக்கிறாய்; என்னுடையதெல்லாம் உன்னுடையதே" (லூக். 15:31) எனத் தந்தை கூறும் அளவுக்கு அற்புதமாய்த் தான் தன் வாழ்க்கையைத் தொடர்ந்தான். ஆனால், அவன் தொடங்கிய பயணத்தை நல்ல முறையில் முடிக்காமல் போனதற்குக் காரணம் - மற்றவர்களை ஏற்றுக்கொள்ள மனமில்லாமல் போனதுதான். சொந்தத் தம்பியையும் சட்டத்தின் பார்வையில் தான் பார்த்தானே தவிர, பாசத்தின் பார்வையில் காண முயலவில்லை; நாம் எப்படிப்பட்டவர்களாய் இருக்கப் போகிறோம்? தன்னை விழத் தாட்டியவர்களைக்கூட கருணையோடு நோக்கி;

மீண்டெழுந்த இயேசுவைப் போலவா? அல்லது ஏற்க மனமின்றி வெறுத்தொதுக்கிய மூத்த மகனைப் போலவா? எதைத் தெரிவு செய்யப் போகிறோம் - ஏற்கும் மனதையா? எதிர்க்கும் குணத்தையா?

**செபம்**

எல்லோரையும் ஏற்றுக்கொள்ளும் நல்ல மனதோடு, எனது வாழ்க்கைப் பயணத்தை இறுதிவரை இனிதாக்கிட அருள் தாரும் இயேசுவே.

◆

✦ **பத்தாம் நிலை**

## பகிரும் பண்பா?
## பதுக்கும் மடமையா?

"நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து... செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்" (2. கொரி. 8:9) என்ற பவுலடியாரின் கூற்றுக்கு ஏற்ப, தம் உடல், இரத்தம் அனைத்தையும் மானுடத்துக்காகத் துறந்த இயேசுவின் உடல் மீது ஒட்டிக் கொண்டிருந்த ஆடையையும் உறிந்து எடுக்கின்றனர் அந்தக் கயவர்கள். அப்போதும் கருணையின் வடிவாகவே நின்றார் இயேசு.

நம்மிடம் இருக்கும் பொருளோ, நமது உடைமைகளோ, விலைமதிப்புமிக்க அணிகலனோ, எது பறிக்கப்பட்டாலும் நமக்கு ஏற்படுகிற கோபத்தை அளவிடவே முடியாது. நம்முடையதும், நமக்கு உரியதும் அபகரிக்கப்படும் போது எழுகின்ற சீற்றம் நியாயமானதுதான். ஆனால் எது நம்முடையது என்கிற கேள்வியும் கேட்கப்பட வேண்டியுள்ளது. "இது என்னுடையது மட்டுமே" என எதன்மீது நாம் உரிமை பாராட்ட முடியும்? விலை கொடுத்து வாங்குகிற அரிசி

நம்முடையது என்றாலும், அதை விளைவித்த விவசாயியின் வியர்வைக்கு உரிய விலை தரப்பட்டுள்ளதா? பின் ஏன் பட்டினிச் சாவுகளும், விவசாயிகளின் தற்கொலைகளும் தொடர்கின்றன? உழைத்துப் பெற்ற ஊதியம் நம்முடையது என்பதில் ஐயம் இருக்க வாய்ப்பில்லை. ஆனால், உழைப்பிற்கேற்ற ஊதியம் அனைவருக்கும் கிடைக்கிறதா? எனவேதான், நம் தேசப் பிதா மகாத்மா காந்தி கூறுவார்; "எல்லோருடைய தேவைக்கும் போதுமானது இவ்வுலகில் இருக்கிறது. ஆனால் யாருடைய பேராசைக்கும் போதுமானது இவ்வுலகில் இருப்பது இல்லை" என.

பகுத்துண்டு வாழும் பண்பை மனிதன் இழந்து, பதுக்கிப் பெருக்கும் வழியை என்றைக்குத் தொடங்கினானோ, அன்று முதல் மனிதன் சிலரது வறுமைக்கும், நிர்வாணத்திற்கும், அவமானத்திற்கும் காரணமாகத்தான் இருந்து வருகிறான். "என் நெஞ்சமே! உனக்கு பல்லாண்டுகளுக்கு வேண்டிய பலவகைப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன; நீ ஓய்வெடு; உண்டு குடித்து மகிழ்ச்சியில் திளைத்திடு" (லூக். 12:19) என்று கூறிய செல்வந்தனைப் பார்த்து கடவுள் கூறிய வார்த்தைகள் நம் செவிகளிலும் விழட்டும் "அறிவிலியே, இன்றிரவே உன் உயிர் உன்னைவிட்டு பிரிந்து விடும். அப்பொழுது நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்?" (லூக். 12:20) பதில் சொல்ல வேண்டியதும், தெரிந்து கொள்ள வேண்டியதும் நாம்தான். எது நம்முடைய தேர்வு - பகிரும் பண்பா? பதுக்கும் மடமையா?

**செபம்**

பகிர்ந்து வாழும் போது தான் நான் உம்முடைய சாயல் என்பதை உணர்ந்து வாழ்கின்ற அருளினைத் தாரும் இயேசுவே!

◆

# உடலின் ஒறுத்தலா? ஆன்மாவின் இழப்பா?

“பாலைவனத்தில் மோசேயால் பாம்பு உயர்த்தப்பட்டது போல மானிட மகனும் உயர்த்தப்பட வேண்டும். அப்போது அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலை வாழ்வு பெறுவர்” (யோவா. 3:14,15) என்கிற மறை நூல் வாக்கு நிறைவேறி, அனைவரும் நிலைவாழ்வு பெறவேண்டுமெனில் இயேசு சிலுவையிலே அறையப்பட்டு கட்டுண்டவராய் இருப்பது அவசியம். எனவே நம்முடைய ஈடேற்றத்திற்காக இயேசு தம்மையே சிலுவையில் அறையப்படுவதற்குக் கையளித்தார்.

இயேசுவைப் போலவே தங்கள் உடலை வருத்திக் கொள்ளத் துணிந்தவர்கள் பலரைத்தான் நாம் புனிதர்கள் எனக் கொண்டாடுகின்றோம். “ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்கு கிடைக்கும் பயன் என்ன?” (மாற். 8:36) என்கின்ற கேள்வியைப் புரிந்து கொண்டதால்தான் புனிதர்கள் பலர் தங்கள் நிலை வாழ்விற்காகவும், ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் உடலை ஒறுத்துக் கொண்டார்கள்.

நாம் நிலை வாழ்வு பெற வேண்டும் என்பதற்காகவும், நம்முடைய ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் இயேசு தம் உடலையே வருத்திச் சிலுவைச் சாவுக்குக் கையளித்தார் என்றால் நாம் நம்முடைய சொந்த ஆன்ம ஈடேற்றத்திற்காகவும், நிலை வாழ்விற்காகவும் எந்தத் தியாகமும், ஒறுத்தலும் செய்யாமல் எப்படி இருக்க முடியும்? எனவேதான், சிறுபிள்ளைகளுக்குச் சொல்லுவது போல இயேசு கூறியுள்ளார்.

“உங்கள் கையோ, காலோ, உங்களை பாவத்தில் விழச் செய்தால் அதை வெட்டி எறிந்து விடுங்கள். நீங்கள் இரு கையுடனோ, இரு காலுடனோ என்றும் அணையாத நெருப்பில்

தள்ளப்படுவதைவிட கை ஊனமுற்றோராய் அல்லது கால்ஊனமுற்றோராய் நிலை வாழ்வில் புகுவது உங்களுக்கு நல்லது.'' (மத். 18:8) கருணாமூர்த்தியான இயேசுவிடமிருந்து இத்துணை கடுமையான வார்த்தைகள் வருவதற்கு காரணமே அவர் நம்மீது கொண்ட கரிசனைதான். எந்த மனிதனின் நிலை வாழ்வுக்காக, அவர் தன்னையே சிலுவையில் பிணைத்துக் கொண்டாரோ, அந்த மனிதன் நித்திய தண்டனையை அடைவது அவரால் சகித்துக்கொள்ள முடியாத ஒன்று; எனவேதான் உடலின் உறுப்புக்களை வேண்டுமானாலும் இழக்கத் தயாராயிருங்கள்; ஆனால் ஆன்மாவை இழந்து விடாதீர்கள் என எச்சரிக்கை கலந்த வேண்டுகோள் விடுக்கின்றார். நாம் எதனைத் தேர்வு செய்யப் போகிறோம் - உடலின் ஒறுத்தலையா? ஆன்மாவின் இழப்பையா?

**செபம்**

உடலைக் கொல்கிறவனைவிட ஆன்மாவைக் கொல்கிறவனுக்கு அஞ்சுகிற தெய்வ பயத்தை எங்களுக்குத் தாரும் இயேசுவே!

◆

✦ **பன்னிரண்டாம் நிலை**

## கீழ்ப்படிதலால் வாழ்வா? கீழ்ப்படியாமையால் மரணமா?

"கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதாமல்... சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்கு கீழ்ப்படிந்த'' (பிலி. 2:6,8) இயேசுவை, தந்தையாம் கடவுள் "மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.'' (பிலி. 2:9). ஆனால் நம் ஆதிப்பெற்றோருக்கு நிகழ்ந்ததோ இதற்கு நேர் எதிரான ஒன்று. "நீங்கள் சாகவே மாட்டீர்கள்; ஏனெனில் நீங்கள் அக்கனியை உண்ணும் நாளில் உங்கள் கண்கள்

திறக்கப்படும். நீங்கள் கடவுளைப்போல் ஆவீர்கள்" (தொ.நூ. 3:4,5) என்று கூறிய அலகையின் ஆசைவார்த்தைகளுக்கு மயங்கி, தங்கள் கீழ்ப்படியாமையால் தங்களுக்கும், மனித இனம் முழுமைக்கும் சாவை வருவித்தனர்.

கீழ்ப்படியாமை என்பது நம் முதல் பெற்றோர் தொடங்கி, இன்று வாழுகிற நம் ஒவ்வொருவரிடமும், புரையோடியிருக்கிற பண்பு. கடவுளுடைய சட்டங்களுக்குக் கீழ்ப்படிவது அல்லது கீழ்ப்படியாமல் இருப்பது என்பது ஒருபுறம் இருக்கட்டும். சாதாரண சாலை விதிகளுக்குக் கீழ்ப்படிவது கூட நம்மில் பல பேருக்கு இயலாத காரியமாய் இருக்கிறது. படிக்கட்டுகளில் தொங்கிக் கொண்டு பயணிப்பதும், தலைக்கவசம் அணியாமல் இருசக்கர வாகனங்களை ஓட்டுவதும், புத்தாண்டுக் கொண்டாட்டம் என்ற பெயரில் மின்னல் வேகத்தில் வண்டி ஓட்டுவதும் விதிகளை மீறும் செயல்கள் மட்டுமல்ல; சில நேரங்களில் சாவை வருவிக்கிற விபத்துக்கான காரணங்கள் என்பது ஏன் நமக்குப் புரிவதில்லை? இப்படி ஒவ்வொரு வயதிலும், பருவத்திலும், நமக்கு இருக்கிற கீழ்ப்படியாமைக் குணத்தை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் வாழ்க்கை அனுபவம் என்பது ஒரு பாடத்தைத் தெள்ளத் தெளிவாக உணர்த்துகிறது. கீழ்ப்படிந்தவர்கள் தாழ்ந்து போனதும் இல்லை; கீழ்ப்படியாதவர்கள் உயர்ந்து நின்றதாய் சரித்திரமும் இல்லை. விட்டில் பூச்சிகள் போல சிறிது காலம் மின்னுகிற அவர்களது வாழ்க்கை மண்புழுதியென மக்கிப் போய்விடும். இயேசுவின் சிலுவை மரணம் கீழ்ப்படிதலுக்கான பாடம் மட்டும் அல்ல; வாழ்வு பெறுவதற்கும், வாழ்வில் உயர்வுவதற்குமான பாடம். ஒரே ஒரு மனிதரின் கீழ்ப்படியாமையால் பாவமும், அதன் வழியாய் சாவும், நுழைந்தது போல், ஒருவரின் கீழ்ப்படிதலால் நாம் அனைவரும் கடவுளுக்கு ஏற்புடையவராகி வாழ்வினைப் பெற்றுக் கொண்டோம். (உரோ. 5:12,19). இயேசுவின் கீழ்ப்படிதல் நிறைந்த சிலுவை மரணம் நமக்கு முன் வைக்கின்ற தேர்வு கீழ்ப்படிதலால் வாழ்வா? கீழ்ப்படியாமையால் மரணமா?

**செபம்**

விண்ணுலக, மண்ணுலக விதிகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் நல்வாழ்வை எமதாக்குகிற தாழ்ந்த உள்ளத்தைத் தாரும் இயேசுவே.

◆

✦ **பதின்மூன்றாம் நிலை**

## பாதம் அமரும் பக்குவமா? பரபரப்பின் பதட்டமா?

பரிதாபக் கோலத்தில் காட்சி தரும் மரியாவிடம் நாம் பார்ப்பது அமைந்த உள்ளத்தை. தனது ஒரே மகனின் கோரச் சாவு எந்தத் தாயையும் உடைத்துத்தான் போட்டிருக்கும். ஆனால், மரியா நிலை தடுமாறவில்லை என்பதில்தான் அவரது மேன்மை விளங்குகிறது.

போட்டியும் பொறாமையும் நிறைந்துவிட்ட இவ்வுலகில் நாம் எல்லோரும் பரபரப்பாகவே இருக்கப் பழகிவிட்டோம். சுறுசுறுப்பாய் இருப்பது நல்லது; அது செயல்பட வைக்கிற ஒன்று. பரபரப்பாய் இருப்பதுகூட பரவாயில்லை; அது உணர்வுப்பூர்வமான ஒன்று. ஆனால் படபடப்பாய் இருப்பது மிகவும் ஆபத்தானது. அது பல நேரங்களில் அழிவில்தான் முடியும். “பதறிய காரியம் சிதறும்” எனப் பெரியவர்கள் சொன்னது அனுபவத்தால் விளைந்த ஞானம் அல்லவா?

நம்மில் பலர் படபடப்பாகவே வாழ்க்கையை நடத்தப் பழகிவிட்டதால், வெற்றியில் தலைகால் தெரியாமல் ஆடுகிறோம்; தோல்வியில் இருக்கும் இடம் தெரியாமல் பதுங்குகின்றோம். ஏமாற்றம், தோல்வி, தகர்ந்து போகும் கனவுகள், எல்லாம் முடிந்து போனது போன்ற உணர்வு - இவையெல்லாம் எல்லோருடைய வாழ்விலும் ஏதோ ஒரு விகிதத்தில் வந்தே தீரும். அவற்றை எப்படி எதிர்கொள்கிறோம் என்பதுதான் சவால். இதற்கு மரியாவைவிட சிறந்த எடுத்துக்காட்டான நபர் இருக்கவே முடியாது. மரியாவுக்கு எப்படி இது சாத்தியமாயிற்று

என்று நாம் ஆழ்ந்து தியானித்தால், நமக்கு ஒன்று புலப்படும். அவர் எப்போதுமே "நிகழ்வுகளையெல்லாம் தமது உள்ளத்தில் இருத்தித் தியானிக்கப்" பயின்றிருந்தார். (லூக். 2:19, 51).

இத்தகையப் பண்பைத்தான் இயேசு இன்னொரு மரியாவிடமும் பார்த்துப் பாராட்டினார். பரபரப்பாய் இருந்த மார்த்தா பதட்டத்தோடு குறைசொல்ல ஆரம்பித்தபோது, பாதம் அமர்ந்த மரியாவை இயேசு பாராட்டியதோடு நிற்கவில்லை. "தேவையானது ஒன்றே. மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள்: அது அவளிடமிருந்து எடுக்கப்படாது" (லூக். 10:42) எனத் திட்டவட்டமாய்க் கூறிவிட்டார். எல்லாச் சூழ்நிலைகளிலும், குறிப்பாக நெருக்கடியான வேளைகளிலும் நாம் மன அமைதியோடு வாழவிரும்பினால் மரியாவைப் போன்ற அமைந்த உள்ளத்தை நமதாக்க முயலுவோம். நம்முடைய மன அமைதி நம் கையில்தான் உள்ளது. அது நாம் செய்யும் தேர்வைப் பொறுத்தது. எதைத் தெரிந்தெடுக்கப் போகிறோம் - பாதம் அமரும் பக்குவமா? பரபரப்பின் பதட்டமா?

**செபம்**

தென்றல் வீசுகையிலும், புயல் வீசுகையிலும், மரியாவைப் போன்று அமைந்த உள்ளத்தோடு வாழ்க்கையை அணுகுகிற மனப்பக்குவத்தைத் தாரும் இயேசுவே!

◆

✦ **பதினான்காம் நிலை**

# விதைக்கப்பட்ட கோதுமை மணியா? புதைக்கப்பட்டத் தாலந்தா?

இயேசுவின் அடக்கத்தை சிலுவைப் பாதையின் கடைசித்தலம் என்று வேண்டுமானால் கூறலாமே தவிர, நிச்சயமாய் அது அவரது முடிவல்ல. அதுதான் ஆரம்பங்களின் ஆரம்பம். புதிய மானுடத்தின் ஆரம்பம், மீட்கப்பட்டோரின் ஆரம்பம், திரு

அவையின் ஆரம்பம் - இப்படி எண்ணற்றத் தொடக்கங்களின் ஆரம்பம். இயேசுவின் கல்லறையில் தான் புது வாழ்வு உதயமாகிறது.

புதிதாய் ஒன்று தொடங்க வேண்டுமென்றால் பழையது ஒன்று முடிந்துதான் ஆக வேண்டும். இரவின் முடிவில்தானே பகல் பிறக்க முடியும். விதையின் அழிவில்தானே முளை துளிர்க்க முடியும். கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால் தானே மிகுந்த விளைச்சலை அளிக்க முடியும்! (யோவா. 12:24)

வாழ்க்கையில் நாம் எல்லோருமே அதிக விளைச்சலை எதிர்பார்க்கிறோம். நலன்களையும் வெற்றிகளையும் எதிர்நோக்குகிறோம். ஆனால் மடிவதற்கும், தியாகம் புரிவதற்கும் தான் நாம் தயாராய் இருப்பதில்லை. மடிவது என்பது சும்மா இருத்தல் இல்லை; செயலற்றுப் போவதும் இல்லை. பல நேரங்களில், சும்மா இருப்பதிலேயே சுகம் காணும் நாம், திடீரென்று ஒரு அதிசயம் நடக்காதா? என ஏங்குகிறோம். அதற்கு வாய்ப்பே இல்லை என்பதனை இயேசு ஒரு உவமையில் தெளிவாகவே சொல்லியிருப்பார். "உமக்கு அஞ்சியதால், நான் போய் உம்முடைய தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன். இதோ பாரும் உம்முடையது" (மத். 25:25) என்று சொன்ன ஒரு தாலந்து பெற்றவனின் முடிவு நமக்குத்தெரியும். அவனிடமிருந்த அந்தத் தாலந்தும் பறிக்கப்பட்டு, பத்துத் தாலந்து உள்ளவரிடம் கொடுக்கப்பட்டது. "ஏனெனில் உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும்; அவர்கள் நிறைவாகப் பெறுவர்." (மத். 25:29)

நாம் வாழ்வின் நலன்களை நிறைவாய் பெறுகிறோமா? என்பதும், வாழ்க்கைக்குப் பிறகு நிலை வாழ்வைப் பெறுகிறோமா? என்பதும், நாம் எப்படிக் காலத்தைக் கழிக்கிறோம் என்பதைப் பொறுத்தே அமையும். விதை போல் வீரியமாய் விழித்திருந்தோம் என்றால் விருட்சமாய் உயர்வோம். முடிந்து வைக்கப்பட்ட மினாவைப் போலவும், புதைத்து வைக்கப்பட்ட தாலந்து போலவும், முடங்கிக்

கிடந்தோமென்றால் இழப்பே நம் விதியாகும். எப்படி வாழப் போகிறோம் என்பதைத் தேர்வு செய்வோம் - விதைக்கப்பட்ட கோதுமை மணியாகவா? அல்லது புதைக்கப்பட்ட தாலந்தாகவா?

## செபம்

இவ்வுலகில் உம்மால் விதைக்கப்பட்ட நான், நீர் விரும்பும் விளைச்சலைத் தர, உழைக்கும் உரத்தினை எனக்குத் தாரும் இயேசுவே!

◆

## முடிவுரை

பிலிப்பியருக்கு எழுதியத் திருமுகத்தில் தூய பவுலடியார் பதிவு செய்கிற கூற்று இது: "எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்" (பிலி. 2:9) கிறிஸ்துவின் உயிர்ப்புக்கும், உத்தானத்திற்கும் ஆதாரமாய், அடித்தளமாய் இருந்தது அவரது தேர்வு. அதனையும் பவுலடியார், அதற்கு முந்தைய சொற்றொடர்களில் அழகாகப் பதிவு செய்கிறார். கடவுள் வடிவில் விளங்கிய இயேசு, கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதாமல், எண்ணிப் பார்க்கவே முடியாத சில தேர்வுகளைச் செய்கிறார். "தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று... சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்." (பிலி. 2:7,8). எனவே, கடவுள் அவரை மிகவே உயர்த்தினார். உயர்வும், உயிர்ப்பும் நமக்கு வசப்பட வேண்டுமென்றால் நம்முடைய தேர்வுகள் சரியாக அமைய வேண்டும். இந்தச் சிலுவைப் பாதைச் சிந்தனைகள் நம் அன்றாட வாழ்வில் நாம் மேற்கொள்ள வேண்டிய முடிவுகளை, தேர்ந்து கொள்ள வேண்டிய சரியான தேர்வுகளை அடையாளம் காட்டியிருக்கும். அதன்படி வாழ்வைத் தேர்ந்தெடுப்போம். இயேசுவின் உயிர்ப்பில் பங்கு கொள்வோம்.

◆